பாதிக்கப்பட்டவர்களின் கருத்துகளைக் கேட்காமல்

திருநர் (உரிமைகள் பாதுகாப்பு) சட்டத்தில் திருத்தங்களைத் திணிக்கக் கூடாது!

முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

சென்னை, மார்ச் 26-

"யாருடைய உரிமைகளை வாழ்வைப் பாதிக்கிறதோ அவர்களது கருத்துகளையே கேட்காமல் திருநர் (உரிமைகள் பாதுகாப்பு) சட்டத்தில் திருத்தங்களைத் திணிக்கக் கூடாது" என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் திருநர் (உரிமைகள் பாதுகாப்பு) சட்டத்தில் திருத்தங்களைத் திணிக்கக் கூடாது என்று வலியுறுத்தி வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

யாருடைய உரிமைகளை, வாழ்வைப் பாதிக்கிறதோ, அவர்களது கருத்துகளையே கேட்காமல் திருநர் (உரிமைகள் பாதுகாப்பு) சட்டத்தில் திருத்தங்களைத் திணிக்கக் கூடாது.

திருநர் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் என இயற்றப்பட்டுள்ள சட்டத்தைத் திருநர் சமுதாயத்தினரே எதிர்க்கிறார்கள் என்றால், அது ஏன் என்று ஆராய வேண்டுமே ஒழிய, அதனைத் திணிக்கக் கூடாது.

ஒன்றிய பா.ஜ.க. அரசு இம்முயற்சியை நிறுத்தி, திருநர்களுடன் கலந்தாலோசித்து, அடுத்தகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முன்னர் திருநர்களின் உண்மையான இசைவைப் பெற முயல வேண்டும்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

சென்னை கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட துறைமுகம் எழும்பூர், திரு.வி.க. நகர், வில்லிவாக்கம், அம்பத்தூர் ஆகிய தொகுதிகள் வழக்கறிஞர்கள் ஆலோசனைக் கூட்டம் நேற்று (25-03-2026 - புதன்கிழமை) மாலை 6 மணி அளவில் சென்னை பிரகாசம் சாலையில் உள்ள ஹயாத் மஹாலில் நடைபெற்றது. இந்த ஆலோசனைக் கூட்டத்தில் இந்து சமய அறநிலைத்துறை அமைச்சர் சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பி.கே.சேகர்பாபு ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றினார். இதில் பகுதி கழகச் செயலாளர்கள் எஸ்.ராஜசேகர், எஸ்.முரளி, இரா.நரேந்திரன், கே.எஸ்.ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, கே.சந்துரு, ஜி.எம்.தேவன், துரை கண்ணன், வெ.பரிமளம் எம்.சி, லண்டன் முருகன், ஆர்.விஜயகுமார், ரஞ்சித் விஜயாலயன் மற்றும் வழக்கறிஞர் அணி நிர்வாகிகள், தலைமை கழக வழக்கறிஞர்கள் கலந்து கொண்டனர்.

புல்லட் ரயில் அறிவிப்பில் தமிழ்நாடு முற்றிலும் புறக்கணிப்பு!

ஒன்றிய பா.ஜ.க. அரசின் எதேச்சதிகாரப் போக்கிற்கு தமிழ்நாட்டு மக்கள் வரும் தேர்தலில் தக்க பாடம் புகட்டுவார்கள்!

கே.இ.பிரகாஷ் எம்.பி. கண்டனம்!

புதுடெல்லி, மார்ச் 26-

தமிழ்நாடு உட்பட நாடு முழுக்க அறிவிக்கப்பட்டுள்ள புல்லட் ரயில் திட்டங்களின் முக்கிய விவரங்களைக் கேட்டு, நாடாளு மன்றத்தில் ரயில்வே அமைச்சகத்திடம் ஈரோடு கே.இ.பிரகாஷ் கேள்வி எழுப்பினார். இதற்கு கிடைத்திருக்கும் பதில்கள், தமிழ்நாட்டின் தேவைகளை சிறிதும் கவனத்தில் கொள்ளவில்லை என்பதை உறுதிப்படுத்தியுள்ளன.

மஹாராஷ்டிரா, குஜராத், உத்தரப்பிரதேச மாநிலங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படும் நிலையில், நாட்டிற்கு அதிக வரித்தொகையை செலுத்தும் தமிழ்நாடு இப்படி புறக்கணிக்கப்பட்டிருப்பது, ஒன்றிய பா.ஜ.க அரசின் எதேச்சதிகாரத்தையும் தமிழ் மக்களின் மீதான பாரபட்சத்தையும் காட்டுகிறது.

1. ரயில்வே திட்டங்களில் தமிழ்நாடு மீது தொடரும் பாரபட்சம்:

ரயில்வே திட்டங்களில் தமிழ்நாடு புறக்கணிக்கப் படுவது புதிய விவகாரம் அல்ல. இந்த ஆண்டு ரயில்வே பட்ஜெட்டில் தமிழ்நாட்டிற்கு மொத்தமாகவே 7000 கோடி ரூபாய் என்ற குறைவான தொகையே ஒதுக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து, தமிழ்நாட்டின் சார்பில் முன் வைக்கப்பட்ட புதிய ரயில் வழித்தடங்கள், ஏற்கனவே இருக்கும் வழித்தடங்களில் கூடுதல் ரயில்கள், ரயில் நிலையங்களின் மேம்பாடு போன்ற பல முக்கியக் கோரிக்கைகள் கிடப்பில் போடப்பட்டன.

எனது தொகுதியான ஈரோட்டின் ரயில்வே தேவைகள் குறித்து, ஒவ்வொரு கூட்டத்தொடரிலும் தொடர்ச்சியாக கோரிக்கைகளை முன்வைத்து வருகிறேன்.

இவற்றில் தொடர் அழுத்தத்திற்கு பணிந்து சில கோரிக்கைகளை ஒன்றிய அரசு நிறைவேற்றுவதாக ஒப்புக்கொண்ட நிலையில், பல கோரிக்கைகள் இன்னும் கவனத்தில் கொள்ளப்படாமலேயே இருக்கின்றன.

இதன் அடுத்தகட்டமாக, புல்லட் ரயில் திட்டங்களிலும் தமிழ்நாட்டின் தேவைகள் புறக்கணிக் கப்பட்டுள்ளது.

2. மகாராஷ்டிராவிற்கு ஒரு நியாயம், தமிழ்நாட்டிற்கு ஒரு நியாயமா?

மஹாராஷ்டிராவில் ஏற்கனவே மும்பை அகமதாபாத் புல்லட் ரயில் சேவை பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்நிலையில் தற்போது மும்பை புனே புல்லட் ரயிலும் அந்த மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. பொதுவாக புல்லட் ரயிலில் Interstate தன்மைக்கே முன்னுரிமை அளிக்கப்படும் சூழலில், மஹாராஷ்டிராவிற்கு மட்டும் அந்த விதி தளர்த்தப்பட்டு Intrastate ரயில் ஒதுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் தெற்கு மற்றும் மேற்கு மாவட்டங்களின் முக்கிய நகரங்களை இணைக்க, பல ஆண்டுகளாக புல்லட் ரயில்கள் கேட்கப்பட்டு வருகின்றன. ஆனால், இது பற்றி எந்த அக்கறையும் காட்டாமல், மஹாராஷ்டிரா உள்ளிட்ட மாநிலங்களுக்கு அனைத்தையும் ஒதுக்கி, தமிழ்நாட்டை கைவிட்டிருக்கிறது ஒன்றிய அரசு.

3. முதலமைச்சரின் தலைமையில் 'தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும்':

தமிழ்நாடு முதலமைச்சரின் தலைமையில், தமிழ்நாடு மாநிலம் அனைத்து துறைகளிலும் வளர்ச்சிநடை போட்டுக் கொண்டிருக்கிறது. ஜிடிபி, தனிநபர் வருமானம், தொழில் வளர்ச்சி உள்ளிட்ட அனைத்து அலகுகளிலும் அவரது சாதனைகள் வரலாற்றை மாற்றி எழுதிக் கொண்டிருக்கின்றன. இதற்கு ஊடகங்களும், அங்கீகரிக்கப்பட்ட அமைப்புகளும், ஒன்றிய அமைச்சகங்களும் வெளியிடும் தரவுகளே சாட்சி.

ஒன்றிய அரசின் எதேச்சதிகாரத்தை முறியடித்து தமிழ்நாட்டிற்கு தேவையானவற்றை பூர்த்திசெய்வதில் புகழ்பெற்ற அவர், ரயில்வே திட்டங்களிலும் ஒன்றுவிடாமல் கொண்டுவந்து சேர்ப்பார். அவர் தலைமையில் "தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும்".

வரும் தேர்தலில், தமிழ்நாட்டை புறக்கணித்து மகிழும் ஒன்றிய பா.ஜ.க அரசிற்கு தக்க பாடம் புகட்டுவோம்!

இவ்வாறு கே.இ.பிரகாஷ் எம்.பி. தெரிவித்துள்ளார்.

காளையார்கோவில் த.வெ.க.வினர் கழகத்தில் இணைந்தனர்!

அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் முன்னிலையில்!

சிவகங்கை மார்ச் 26.

சிவகங்கை மாவட்டம் காளையார் கோவில் தெற்கு மாவட்ட த.வெ.க. துணைச் செயலாளர் மு.ராஜ்குமார் தலைமையில் செல்வராஜ், கரன், அன்பு, லிவி ராஜா ,உட்பட 25 பேர் அக்கட்சியில் இருந்து விலகி மாவட்ட கழக செயலாளர், கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் முன்னிலை யில் கழகத்தில் இணைந்தார்கள்.

இதேபோல் காளையார்கோவில் வடக்கு ஒ.பி.எஸ். அணி ஒன்றிய செயலாளர், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் , முன்னாள் கூட்டுறவு சங்க தலைவர் செல்லபாண்டியன், ஒன்றிய துணை செயலாளர் பாகனேரி ஆண்டியப்பன் உள்பட 25 பேர் ஆக மொத்தம் 50 பேர் த.வெ.க. ஓ.பி.எஸ். அணியிலிருந்து விலகி அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் முன்னிலையில் கழகத்தில் இணைந்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில் காளையாரகோவில் வடக்கு ஒன்றிய செயலாளர் ஆர்.எம். கென்னடி, துணைச் செயலாளர் ஆர்.கோதண்டபாணி, நிர்வாகிகள் மகளிர் அணி வி. எஸ். எம். எஸ்தர் மேரி, ஆர் .வி .எஸ். அரங்நாதன், கணேசன் உட்பட, ஒன்றிய கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

தாம்பரம் வர்த்தக அணி துணை அமைப்பாளர் இரா.செல்வகுமார் சகோதரர்

இரா.இரவிக்குமார் படத்திறப்பு நிகழ்ச்சி!

எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. பங்கேற்பு!

தாம்பரம், மார்ச் 26-

தாம்பரம் மாநகர வர்த்தக அணியின் துணை அமைப்பாளர் முன்னாள் கவுன்சிலர் இரா.செல்வகுமார் சகோதரர் கௌரிவாக்கம் S.I.V.E.T. கல்லூரியின் முன்னாள் மாணவர் தலைவரும் (சேர்மன்), முத்தமிழ றிஞர் கலைஞர் அவர்களின் பாராட்டுப் பெற்றவருமான இரா.ரவிகுமார் அவர்கள் கடந்த 11-3-2026, புதன்கிழமை உடல்நலக்குறைவால் பாதிக்கப் பட்டு மறைவெய்தினார்.

அவரது நினைவுநாள் படத்திறப்பு நிகழ்ச்சியான இன்று (26.3.2026 - வியாக்கிழமை) மாலை 5.00 மணியளவில் மேற்கு தாம்பரம் அரங்கநாதபுரம் 2 வது தெருவில் உள்ள அன்னாரது இல்லத்தில் தாம்பரம் மாநகர செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். ராஜா கலந்துகொண்டு நினைவஞ்சலி செலுத்துகிறார்.

இந்நிகழ்ச்சியில் கழக நிர்வாகிகளும், உள்ளாட்சி மக்கள் பிரதிநிதிகளும், கழக முன்னோடிகளும், கழக தோழர்களும், கூட்டணி கட்சி நிர்வாகிகளும், பொது மக்களும் கலந்து கொள்கின்றனர்.

சென்னை வடக்கு மாவட்டம்

பகுதி வாரியாக BLA-2, BDA, BYA ஆலோசனைக் கூட்டம்!

கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பங்கேற்பு!

மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

சென்னை வடக்கு மாவட்டம் பெரம்பூர், ஆர்.கே.நகர், இராயபுரம் சட்டமன்ற தொகுதிகளில் பகுதி வாரியாக BLA-2, BDA, BYA ஆலோசனைக் கூட்டம் பின்வரும் நாட்களில் கீழ்கண்ட இடங்களில் நடைபெறும்.

நாள் / நேரம்	பகுதி	இடம்
26-03-2026 மாலை-5.00 மணி	பெரம்பூர் வடக்கு	JRK மஹால் கிருஷ்ணமூர்த்தி நகர்
27-03-2026 மாலை-5.00 மணி	ஆர்.கே.நகர் கிழக்கு	வாணி மஹால் வள்ளலார் நெடுஞ்சாலை
27-03-2026 மாலை-6.00 மணி	ஆர்.கே.நகர் மேற்கு	மரியம் மஹால் கொருக்குப்பேட்டை
28-03-2026 காலை-10.00 மணி	இராயபுரம் மேற்கு	அறிவகம், இராயபுரம்
28-03-2026 மாலை-5.00 மணி	பெரம்பூர் தெற்கு	பெருந்தலைவர் காமராஜர் திருமண மண்டபம் பழனி ஆண்டவர் கோவில் தெரு
28-03-2026 மாலை-6.00மணி	இராயபுரம் கிழக்கு	அறிவகம்,இராயபுரம்

மேற்கண்ட கூட்டங்களில், நாடாளுமன்றஉறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர்கள், அந்தந்தபகுதிக்குட்பட்ட, தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், தொகுதி பார்வையாளர்கள், மாவட்டநிர்வாகிகள், பகுதி செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதிநிர்வாகிகள், வட்டசெயலாளர்கள் மற்றும் BLA-2, BDA, BYA நிர்வாகிகள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ.

பொறுப்பாளர், சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க.

பதற்றபாடி!

எல்லைக்கே

வந்து சேர மாட்டோம் என தோல்வி

பயம் கொண்ட ஒருவனே முந்திக்

கொண்டு ஓடுவான் என்பது போல்...

"பருப்பு எண்ணை இலவசம்

ஃபிரிட்ஜ் இலவசம்" போன்ற

மக்களை மலிவாக எண்ணும்

எடப்பாடியின் மளிகைக் கடை

அறிவிப்புகளும்..

"இதையாவது

ஜெயிக்க முடியுமா" என்பதாக

தங்களை மட்டுமே முன்னிறுத்தும்

முன்னாள் அமைச்சர்கள் மட்டுமே

கொண்ட

23 தொகுதிகளுக்கான வேட்பாளர்

பட்டியலும்

எடப்பாடியின் பதற்றத்தையும்

படுதோல்விக்கு காத்திருக்கும்

அ.தி.மு.க.வின்

பரிதாப நிலையையுமே

காட்டுகிறது..

மருது அழகுராஜ்

கழகச் செய்தித் தொடர்புக்

குழு துணைத் தலைவர்

தியாகராயர் நகர் மேற்குப் பகுதிச் செயலாளர்

கே.ஏழுமலை மாமியார் கே.கோவிந்தம்மாள் மறைவு!

கழகத்தினர் அஞ்சலி!

சென்னை, மார்ச் 26-

சென்னை தென் மேற்கு மாவட்டம், தியாகராயர் நகர் மேற்கு பகுதி செயலாளரும் 133வது வார்டு சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினருமான கே.ஏழுமலையின் மாமியாரும் - முன்னாள் வட்ட இளைஞரணி அமைப்பாளர் கே. கோபாலின் தாயாருமான கே.கோவிந்தம்மாள் (வயது 90) அவர்கள் 23-03-2026 அன்று நள்ளிரவு 11:00 மணியளவில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவல் அறிந்து கழகத்தினர் ஏராளமானோர் அன்னாரது உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரது இறுதி நிகழ்வுகள் 24.03.2026 அன்று நடைபெற்றன.

அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (25-3-2026) பத்திரிகையாளர் ரவீந்திரன் துரைசாமி அவர்களின் தந்தை ஸ்ரீகிருஷ்ணன் மறைவடைந்ததையடுத்து அவரது இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த திருவுடலுக்கு மாலை அணிவித்து, அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தார். உடன் அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே. மோகன், வட்டக் கழக செயலாளர் கோவிந்தராஜ் உள்ளிட்டோர் உள்ளனர்.

முரசொலியில் 40 ஆண்டுகளுக்கும் மேலாகப் பணியாற்றிய

முரசொலி என்.முத்து மறைவு!

கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, மார்ச் 26 -

கழகத் தலைவரும் முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:

முரசொலியில் 40 ஆண்டுகளுக்கு மேலாகப் பணியாற்றிய முரசொலி என்.முத்து அவர்கள் உடல் நலக்குறைவால் நேற்று முன்தினம் மறைவெய்தினார் என்ற துயர் மிகு செய்தியறிந்து மிகுந்த வருத்தமுற்றேன்.

முரசொலியில் ஆசிரியர் பிரிவு உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் பணியாற்றி அனைவரின் அன்பினையும் பெற்ற அவரது மறைவு பேரிழப்பாகும்.

அவரது மறைவிற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அவரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கும், அவருடன் பணியாற்றிய முரசொலி ஊழியர்களுக்கும் எனது ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.